1971 ஜூலை 28]

சோழன் கோட்டத்தினருகே ஊசிவாய்க்காலின் குறுக்கே பாலம்.

* 502 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்-சீர்காழி தாலூக்காக்களுக்கிடையே சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்குக் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பாலம் அமைப்பதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : சீர்காழி தாலுகாவையும் மாயூரம் தாலுகாவையும் இணைக்கும் சோழன்கோட்டம் அருகில் ஊசிவாய்க்காலுக்கு குறுக்கே ஒரு பாலம் கட்டுவதற்கு 1964-ம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் அன்று ஆட்சித் தலைவராக இருந்த திரு. வேதநாராயணன் அவர்கள் ஒரு அடிக்கல் நாட்டி யுள்ளார். இன்றுவரை ஏழு ஆண்டுகள் முடிந்தும்கூட அந்தப் பாலம் கட்டு வதற்கான வேலை துவங்கப்படவில்லை. அதற்கான காரணங்களை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த வாய்க்காலின்மேல் ஒரு பாலம் அமைக்க தோராயமாக 25,000 ரூபாய் தேவைப்படும் என்று கணக் கெடுக்கப்பட்டுள்ளது. அப்பாலம் அமைப்பில் ஏற்படும் செலவில் மாயூரம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியங்கள் 50% ஏற்பது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வாய்க்காலின் நீர் பெருக்குத் தன்மை போன்ற விவரங்கள் பொதுப்பணித் துறையிடமிருந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு பாலம் அமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படும்.

ஆனந்ததாண்டவபுரம்-மன்னிப்பள்ளம் சாலை

* 503 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் தாலுக்காவில் ஆனந்ததாண்டவபுரத்தையும் சேத்தூர் மன்னிப்பள்ளத்தையும் இணைக்கும் சாலையை செப்பனிட அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : இந்த ஆனந்ததாண்டவபுரம்-சேத்தூர் மன்னிப் பள்ளம் சாலையில் விவசாய விளைபொருள்கள் அதிகமாக எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அங்கு போக்குவரத்து மிகவும் அதிகரித்திருப் பதால் இனியாவது அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து அந்தச் சாலையை அமைத்துத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சேத்தூர் மன்னிப்பள்ளம் மாயூரம் ஊராட்சி மன்றத்தில் அடங்கிய ஊராட்சிமன்றச் சாலையாகும். இதை அபிவிருத்தி செய்ய தோராயமாக ரூ. 2,80,000 தேவைப்படுகிறது என்று தெரி விக்கப்பட்டிருக்கிறது. இச்சாலை அபிவிருத்தி வேலைகள் அங்கீகரிக்கப்பட்ட சாலை அபிவிருத்தித் திட்டங்களிலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நகல்

வேலேப்பட்டியலிலும் இடம் பெறவில்லே. எனவே அபிவிருத்தி வேலேகள், பிற சாலேகள் என்ற தலேப்பின்கீழ் எடுத்துச் செயலாற்ற வேண்டிவரும். திட்டகால வேலேப்பட்டியலில் இந்தச் சாலே அபிவிருத்தி வேலே இடம் பெறவில்லே. வருங்காலத்தில் தயாரிக்கப்படவிருக்கும் சாலே அபிவிருத்தித் திட்டங்களில் நிதிவசதியை அனுசரித்துத்தான் இதையும் சேர்த்து ஆவன செய்யவேண்டி வரும்.

Papanad-Sholankarai Bridge.

* 504 Q.—THIRU *N. DENNIS*: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Papanad-Sholankarai bridge in Thanjavur district is to be reconstructed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பாலத்தைப் புதுப்பிக்கும் வேலே முடிவடைந்து, போக்குவரத்திற்கு 29—4—1971 மகக்ள் திறந்து விடப்பட்டுள்ளது.

நகராட்சிகளுக்கு நிதிக் குழுக்கள்

* 505 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிகளில் புதிதாக நிதிக் குழுக்கள் அமைத்திடக் கோரி தமிழ்நாடு அரசு நகராட்சிகளுக்கு தாக்கீது அனுப்பி உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இவ்வாறு நிதிக் குழுக்கள் அமைக்கவேண்டுமென்று நகராட்சிகள் கோரிக்கைகள் விடுத்துள்ளனவா? அமையவிருக்கும் நிதிக் குழுக்களின் பணிகள் என்னவென்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னேயில் நடந்த தமிழக நகரவைத் தலேவர்கள் மற்றும் நகராட்சி ஆணேயாளர்களின் கூட்டு மாநாட்டில் அப்போதைய உணவு-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது தலேமை உரையில், நகரவைகள் தங்கள் நிதிநிலேயைக் கண்காணிக்கவும் நகராட்சிகளில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டனவா என்பதைக் கண்காணிக்கவும் ஒரு நிதிக்குழு அமைத்திட வகை செய்யவும், அக்குழு நகரவையின் தலேவர், ஆணேயர் மற்றும் நகரவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அங்கத்தினரைக் கொண்டதாக இருக்கலாம் என்ற கருத்தினேத் தெரிவித்தார். நகரவைகள் ஓர் குறிப்பிட்ட வேலேயைச் செயல்படுத்த, சட்டத்தில் குறிப்பிடாத ஆலோசனேக் குழுக்களே 1920-ம் வருடத்திய தமிழக மாவட்ட நகராட்சி சட்டத்தின் 23-வது பிரிவின்படி அமைக்க வழியுண்டு. இப்பிரிவின்கீழ், நகரவைகள் மேலே குறிப்பிட்ட நிதிக்குழுக்களே அமைக்க கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 17—12—1970-ம் தேதிய அரசாணே எண் 2364-ல் நகரவைகளேக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன்படி நகரவைகள் நிதிக்குழுக்கள் அமைத்துள்ளன. இக்குழுக்களுக்கு நகரவைத் தலேவர் தலேவராக இருப்பார். அதில் ஆணேயரும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினரும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.